ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2017
Year End Evaluation

| ශ්‍රේණිය / தரம் / Grade | විෂයය / பாடம் / Subject | පත්‍රය / வினாத்தாள் / Paper | කාලය / காலம் / Time |
|---|---|---|---|
| 11 | குடியுரிமைக்கல்வி | I | 01 மணித்தியாலம் |

கவனிக்க வேண்டியவை:
- சகல வினாக்களுக்கும் விடை தருக.
- இலக்கம் (01) முதல் (40) வரையிலுள்ள வினாக்களுக்கு, தரப்பட்டுள்ள **(i),(ii),(iii),(iv)** விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிக.
- உமக்கு அளிக்கப்பட்டுள்ள புள்ளடி பத்திரத்தில் உரிய விடையின் இலக்கத்தின் மீது புள்ளடி(X) இடுக.

---

(01) நாட்டில் சகல மக்களுக்கும் நிர்வாக நடவடிக்கைகளில் பங்குகொள்ளும் வாய்ப்பு கிடைப்பது,
(i) ஜனநாயகம் (ii) பிரதிநிதித்துவ ஜனநாயகம்
(iii) நேரடி ஜனநாயகம் (iv) சீர்திருத்த ஜனநாயகம்

(02) "சனநாயக ஆட்சி அனைவரதும் உரிமைகளையும் பெற்றுக்கொள்ளும் ஆட்சிமுறை ஆகும்." எனும் வரைவிலக்கணத்தைக் கூறியவர்.
(i) ஆபிரகாம் லிங்கன் (ii) ஜோன் லொத் (iii) சீலர் (iv) காணர்

(03) பிரதிநிதித்துவ ஜனநாயகம் நடைமுறையில் உள்ள சில நாடுகளில் ஆட்சி நடவடிக்கைகளில் நேரடியாக மக்களின் விருப்பத்தைக் கேட்கும் முறைக்கு உதாரணமாவது,
(i) மக்கள் தீர்ப்பு
(ii) ஊடகங்கள் மூலம் விருப்பங்களறிதல்.
(iii) கலந்துரையாடல் மூலம் தீர்மானம் எடுத்தல்.
(iv) கொமிசன் சபை மூலம் மக்களின் சாட்சி பகரல்.

(04) மாநிலம் என்பதற்கு பதிலான 'கன்டன்' எனும் பதத்தைப் பயன்படுத்தும் சமஷ்டி நாடு,
(i) இந்தியா (ii) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
(iii) நியூசிலாந்து (iv) சுவிட்சர்லாந்து

(05) இலங்கையில் சகல மாகாண சபைகளிலிருந்தும், மத்திய அரசுடன் தொடர்பினை ஏற்படுத்தும் பிரதிநிதி,
(i) ஜனாதிபதி (ii) மாகாண ஆளுநர்
(iii) மாகாண பிரதான அமைச்சர் (iv) பிரதமர்

(06) பௌதீக வாழ்க்கைப் பண்பு சுட்டெண்ணை அளவிட தேவையற்ற அம்சம்,
(i) பிறப்பின்போதான ஆயுள் எதிர்பார்ப்பு (ii) எழுத்தறிவு
(iii) கொள்வனவு சக்தி (iv) சிசுமரண வீதம்

(07) மோதல் தீர்விற்குரிய பிரதான முறை
(i) காப்பாற்றுதல் (ii) கலந்துரையாடுதல் (iii) இணக்கப்பாடு (iv) சனநாயகம்

(08) தேசிய மட்டத்தில் விரிவான வகையில் நிலவும் மோதல் எவ்வாறு அழைக்கப்படும்?
(i) நுண்மையான மோதல் (ii) உள்ளக மோதல்
(iii) வெளிப்படையான மோதல் (iv) சர்வதேச மோதல்



www.saantror.com/Pirasanna
kalvi.lk
Scanned by CamScanner

(09) உலக மயமாக்கலால் இலங்கையருக்கு ஏற்பட்ட பாதகமான தாக்கம்,
(i) மூளைசாலிகளின் வெளியேற்றம் துரிதமாதல்.
(ii) வெளிநாட்டு முதலீடுகள், புதிய தொழில்நுட்பங்களின் வருகை.
(iii) செயற்றிறன் குறைந்த உற்பத்திகள் சந்தையிலிருந்து நீக்கப்படல்.
(iv) பொருளாதாரம் பன்முகப்படுத்தப்படல்.

(10) பொருளாதார வளங்களை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாத்து, தற்கால தேவைகளை நிறைவேற்றுதல்,
(i) சமூக அபிவிருத்தி
(ii) பண்பாட்டு அபிவிருத்தி
(iii) பொருளாதார அபிவிருத்தி
(iv) நிலையான அபிவிருத்தி

(11) உற்பத்தி காரணிகளும் அதற்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளும் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் பொருத்தமற்ற விடை,
(i) நிலம் - குத்தகை
(ii) வட்டி - மூலதனம்
(iii) உழைப்பு - கூலி
(iv) முயற்சி - இலாபம்

(12) சந்தை பொருளாதார முறையில் காணப்படும் பிரதான அம்சம்,
(i) பொதுமக்களின் நல்வாழ்வை நோக்காகக் கொண்டு உற்பத்தி நடைபெறுகிறது.
(ii) உற்பத்தி பொருட்களின் உரிமை அரச, தனியார் துறைகளுக்குரியது.
(iii) சந்தை தடை, ஏற்றமதி இறக்குமதி வரி நீக்கம்.
(iv) பொது நன்மைக்காக, நலன்புரி பணிகளுக்கு அரசு தலையிடல்.

(13) ஒரு பொருளாதார முறையில் நடைபெறும் செயற்பாடுகள்,
(i) உற்பத்தி – விநியோகம் - நுகர்வு
(ii) உற்பத்தி – வியாபாரம் – விநியோகம்
(iii) உற்பத்தி – மொத்த வியாபாரம் - சில்லறை வியாபாரம்
(iv) நுகர்வு – விநியோகம் - வியாபாரம்

(14) சுதந்திர வர்த்தகத்தை மேற்கொள்ளல் தொடர்பான வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (NAFTA) அமைப்பின் அங்கத்துவ நாடு,
(i) பிரான்ஸ்
(ii) இந்தியா
(iii) பின்லாந்து
(iv) கனடா

(15) இலங்கையின் சமகால பொருளாதார அபிவிருத்தியின் புதிய போக்கை 1994 – 2004 காலப்பகுதியில் நோக்குமிடத்து, காணக்கூடிய விசேட இயல்பு,
(i) உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பில் தனியார் துறையின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளல்.
(ii) பயிர்ச்செய்கைக்கு முதலிடம் கொடுத்தல.
(iii) சலாகா முறை நடைமுறைப்படுத்தப்படல்.
(iv) தேசிய வளங்களில் அபிவிருத்தியை அதிகளவு நிலைநிறுத்தல்.

(16) நிலையான அபிவிருத்தியின் அடிப்படை நோக்கமாவது,
(i) பொதுமக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுதல்.
(ii) இயற்கை வளங்களை பாதுகாப்பதுடன், மனித தேவைகளை பூர்த்தி செய்தல்.
(iii) நவீன தொழில்நுட்பத்துடன் பிற நாடுகளை புறந்தள்ளி பயணித்தல்.
(iv) சமூகத்தில் காணப்படும் பல்வெறு கலாசார அம்சங்களை சூழலுடன் இணைத்தல்.

(17) சமஷ்டி ஆட்சியில் காணப்படும் அனுகூலம்,
(i) பல்கலாசார சமூகத்துடன் பல்வகைமையை மதிப்பதன் மூலம் பொது தேசிய உணர்வை வளர்த்தல்.
(ii) மத்திய அரசிலிருந்து பிராந்தியங்களை பிரித்து செல்ல முயற்சித்தல் தொடர்பான செயற்பாடு.
(iii) அதிகார பரவலாக்கத்தில், பிராந்திய அரசுகளுக்கு கிடைத்திருக்கும் அதிகாரங்களால் அவர்களுக்கு திருப்தியின்மை.
(iv) பிராந்திய ஆட்சிக்காக அனுபவமுள்ள அதிகாரிகள் காணப்படாமை.


kalvi.lk
Scanned by CamScanner

(18) அரச அதிகாரத்தைச் செயற்படுத்தும் உயர் சட்டங்கள்,
(i) தேசிய சட்டம் (ii) அரசியல் யாப்பு
(iii) குற்றவியல் சட்டம் (iv) குடியியல் சட்டம்

(19) உயர் நீதிமன்றம் தவிர இலங்கையில் காணப்படும் சிரேஷ்ட நீதிமன்றம்,
(i) மேல்நீதிமன்றம் (ii) நீதவான் நீதிமன்றம்
(iii) மேன்முறையீட்டு நீதிமன்றம் (iv) மாகாண மேல் நீதிமன்றம்.

(20) 2000ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் நிலையான அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கருத்தரங்கில் தெரிந்தெடுக்கப்பட்ட எட்டு இலக்குகளுக்குள் அடங்காதது,
(i) வறுமையை ஒழித்தல்.
(ii) அரசு வேளாண்மையை தனியார் மயப்படுத்தல்.
(iii) சிசு மரண வீதத்தை குறைத்தல்.
(iv) சுற்று சூழலை பாதுகாத்தல்.

(21) ஐக்கிய நாடுகள் சங்கத்தால் மனித உரிமைகள் தொடர்பிலான சர்வதேச பிரகடனம் எப்போது வெளியிடப்பட்டது?
(i) 1948 டிசம்பர் 10ம் திகதி (ii) 1948 நவம்பர் 10ம் திகதி
(iii) 1948 மார்ச் 10ம் திகதி (iv) 1948 பெப்ரவரி 10ம் திகதி

(22) A – தேசிய அரசுக் கழகம் ஆரம்பித்தல்.
B – ஆளுநர் நாயகம் பதவி நீக்கப்பட்டு ஜனாதிபதி பதவி அறிமுகம்.
C – பாராளுமன்ற ஆணையாளர் நாயகம் பதவி அறிமுகம்.
D – நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி பதவி அறிமுகம்.

மேலே A,B,C,D இல் குறிப்பிட்டுள்ள தகவல்களில் 1978 இலங்கை இரண்டாம் குடியரசு யாப்பில் காணப்படும் அம்சங்கள் மட்டும் அடங்கிய விடை,
(i) A,B (ii) C,D (iii) B,C (iv) A,D

(23) 13வது யர்பபு சீர்திருத்தத்தின்படி மத்திய அரசுக்குரிய அதிகாரங்களுக்குள் அடங்குவது,
(i) குடிவரவு, குடியகல்வு மற்றும் குடியுரிமை
(ii) தேசிய வீடமைப்பும் நிர்மாணமும்
(iii) சமூகசெவையும் புனர்வாழ்வும்
(iv) விவசாய நடவடிக்கை

(24) சூழல் மோதல் ஏற்படல் தொடர்பிலான முதன்மையான காரணம்,
(i) இயற்கை அனர்த்தம்
(ii) சனத்தொகை அதிகரிப்பு
(iii) வளங்களை அதிகமாகப் பயன்படுத்தல்.
(iv) விவசாய நடவடிக்கைகள் நவீனமயமானமை

(25) அபிவிருத்தியை அளப்பதற்கு பயன்படுத்தப்படும் மனித அபிவிருத்திச் சுட்டியை கணிப்பிட பின்வரும் எச்சமன்பாட்டைப் பயன்படுத்தலாம்?
(i) எழுத்தறிவு- பிறப்பின் போதான ஆயுள் விருத்தி – சிசு மரண வீதம்
(ii) பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு – கல்வி – கொள்வனவு சக்தியைக் அடிப்படையாகக் கொண்ட மொத்த தேசிய உற்பத்தி.
(iii) தனிநபர் வருமானம் - எழுத்தறிவு – சிசு மரண வீதம்
(iv) தாய் மரணவீதம் - சிசு மரண வீதம் - எழுத்தறிவு


www.saantror.com/Pirasanna
kalvi.lk
Scanned by CamScanner

(26) நிரல் 'அ' நிரல் 'ஆ' ஐ பொருத்தமாக தொடர்புபடுத்தினால் வரும் விடையானது,

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| (i) அரசியல் உரிமை | (a) கல்வி கற்கும் உரிமை |
| (ii) பொருளாதார உரிமை | (b) நாம் விரும்பும் சமயத்தை பின்பற்றும் உரிமை. |
| (iii) குடியியல் உரிமை | (c) மக்கள் பிரதிநிதியை தெரிந்தெடுக்கும் உரிமை. |
| (iv) கலாசார உரிமை | (d) வேலையில் நியாயமான கூலியைப் பெறல். |

(i) a,d,c,b (ii) b,a,d,c (iii) c,d,a,b (iv) a,b,c,d

(27) அபிவிருத்தி அடைந்து வரும் ஓர் நாடு.
(i) இந்தியா (ii) யப்பான் (iii) தென்கொரியா (iv) பிரான்ஸ்

(28) வளங்களின் வினைத்திறனை மேம்படுத்தலின் மூலம் நிலையான அபிவிருத்தியை அடையப் பயன்படுத்தும் பிரதான முறைமை,
(i) 3R எண்ணக்கரு (ii) 4R எண்ணக்கரு
(iii) 5R எண்ணக்கரு (iv) 6R எண்ணக்கரு

(29) மனித உரிமைகள் மீறல் தொடர்பில் ஓர் இலங்கையர் புகார் செய்யக்கூடிய அதி உயர் சர்வதேச நிறுவனம்,
(i) சர்வதேச நீதிமன்றம் (ii) ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை
(iii) ஐக்கிய நாடுகள் செயலகம் (iv) ஐக்கிய நாடுகள் மனித உரிமை கொமிசன்

(30) சிறுவர் உரிமைகள் தொடர்பிலான உடன்படிக்கை எத்தனை நியதிகளைக் கொண்டமைந்தது?
(i) 02 (ii) 03 (iii) 04 (iv) 05

(31) ஏதேனும் ஒரு நாடு இராஜதந்திர தொடர்புகளில் வளர்ச்சியை ஏற்படுத்த ஏதுவாகும் அந்நாட்டின் காரணி,
(i) பொருளாதார கொள்கை (ii) அரசியல் கொள்கை
(iii) சமூக கலாசார கொள்கை (iv) வெளியுறவு கொள்கை

(32) சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல் எனும் நோக்கில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டிணைந்த அமைப்பு,
(i) யுனெஸ்கோ (ii) யுனிசெப்
(iii) உலக சுகாதார அமைப்பு (iv) உலக வங்கி

(33) மனிதன் வாழ அவசியமாகும் பொருளாதார உப சேவைகளை மட்டும் உள்ளடக்கிய விடை,
(i) கனியம், நிலம், காற்று (ii) கனியம், நிலம், நீர்மின்சாரம்
(iii) சூரியஒளி, காற்று, நீர் (iv) சூரியஒளி, இயற்கைவாயு, புவி வெப்பம்

(34) இலங்கையின் சிரேஷ்ட பிரஜை என ஒருவரைக் குறிப்பிடும் வயது,
(i) 60-75 வருடங்கள் (ii) 65-75 வருடங்கள்
(iii)50-75 வருடங்கள் (iv) 55-60 வருடங்கள்

(35) சூழல் தொடர்பாக பிரசைகளின் பிரதான கடமை,
(i) சூழல் தொடர்பிலான செயலமர்வுகளை நடைமுறைப்படுத்தல்.
(ii) சுற்றுச்சூழல் வளங்களை சிக்கனமாக பாவித்தல்.
(iii) சூழல் தொடர்பிலான சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்படுதல்.
(iv) அபிவிருத்தி செயற்பாடுகளில் சூழலை ஒழுங்குபடுத்தல்.

(36) வளி மாசடைதலை ஏற்படுத்தும் இயற்கை செயன்முறை அல்லாதது,
(i) ஆகாய விமான பயன்பாடு (ii) எரிமலை வெடிப்பு
(iii) காட்டுத்தீ (iv) புழுதிப் புயல் ஏற்படல்.


kalvi.lk
Scanned by CamScanner

(37) இலங்கையின் சனத்தொகையில் அதிகளவு மக்கள் வாழும் நிர்வாக சபை,
(i) நகர சபை (ii) மாநகர சபை (iii) பிரதேச சபை (iv) கிராம சபை

(38) சட்டமா அதிபரின் பிரதான காரியமாவது,
(i) அரசு தொடர்பான வழக்குகளில் தேவையான சட்ட அறிவுரைகளை வழங்குதல்.
(ii) பிணை வழங்கலும் வழக்குகளை விசாரித்தலும்.
(iii) மேன்முறையீடுகளை ஏற்றலும் விசாரணை செய்தலும்.
(iv) நீதிமன்ற விதிகளை மறுசீரமைத்தல்.

(39) ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் நிலையான உறுப்பு நாடுகள் ஐந்தையும் உள்ளடக்கிய விடை,
(i) சீனா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா
(ii) சீனா, பிரித்தானியா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்க நாடுகள், ரஷ்யா
(iii) பிரான்ஸ், இந்தியா, கனடா, யப்பான், ரஷ்யா
(iv) பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்க நாடுகள், கொரியா, இந்தியா, ஜேர்மனி

(40) சர்வதேச வியாபாரத்துடன் தொடர்புடைய சர்வதேச அமைப்பு
(i) உங்டாட் அமைப்பு (ii) ஐக்கிய நாடுகள் சபை
(iii) நேட்டோ அமைப்பு (iv) சார்க் அமைப்பு

www.saantror.com/Pirasanna
Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk
Scanned by CamScanner

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2017
Year End Evaluation

| | | |
|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 11 | විෂයය / பாடம் / Subject: குடியுரிமைக்கல்வி | පත්‍රය / வினாத்தாள் / Paper: II | කාලය / காலம் / Time: 02 மணித்தியாலம் |

- முதலாம் வினா கட்டாயமானது
- ஏனைய ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.
- விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்கள் ஐந்து.

(01) (i) நவீன அரசுகளில் இனங்காணக்கூடிய அரசியல் கட்சி வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(ii) அரசாங்கத்தின் பிரதான துறைகள் இரண்டை எழுதுக.

(iii) ஒற்றை ஆட்சி நடைமுறையில் உள்ள நாடுகள் இரண்டை குறிப்பிடுக.

(iv) ஐக்கிய நாடுகள் கட்டமைப்பிலுள்ள பிரதான சபைகள் இரண்டை எழுதுக.

(v) சந்தை பொருளாதாரத்தின் பிரதான பண்புகள் இரண்டைத் தருக.

(vi) சட்டம் செயற்படும் முறைகள் இரண்டையும் தருக.

(vii) அபிவிருத்தியை அளவிடும் பாரம்பரிய முறைகள் இரண்டை குறிப்பிடுக.

(viii) சர்வதேச வர்த்தகத்தின் இரு பிரதான வகைகளை குறிப்பிடுக.

(ix) பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் இரண்டை எழுதுக.

(x) இலங்கையில் நீதிமன்றத்தில் சட்டத்தை செயற்படுத்தும் பிரதானிகள் இருவரைக் குறிப்பிடுக.

(2x10=20 புள்ளிகள்)

(02) உலகின் பல நாடுகள் தமது நாட்டில் ஜனநாயக ஆட்சி முறையை கொண்டுள்ளன.

(i) நேரடி சனநாயக முறையினை தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சனநாயக ஆட்சிமுறை இடம்பெறும் ஒரு நாட்டின் அரசியல் யாப்பிற்கமைய செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) சனநாயக ஆட்சியின் வெற்றிக்கு ஏதுவான காரணிகள் மூன்றைக் குறிப்பிட்டு, அதில் ஒன்று, அதன் வெற்றிக்கு எவ்வாறு பங்களிப்பு செய்கின்றது என்பதனை விளக்குக. (05 புள்ளிகள்)

(03) "அரசின் இறுதி உரிமை பொதுமக்களுக்குரியது. மக்களிடம் காணப்படும் இவ் அதிகாரம் இறைமை எனப்படும்."

(i) நவீன அரசுகளில் அதிகார பங்கீடு செய்ய ஏதுவான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மாகாண ஆளுநரிடம் காணப்படும் அதிகாரங்கள் மூன்றை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையில் மாகாண சபைகளின் பயன்களின் மூன்றை எழுதி, அதில் ஒன்றை விளக்குக. (05 புள்ளிகள்)



www.saantror.com/Pirasanna
kalvi.lk
Scanned by CamScanner

(04) "மோதல் என்பது சமூகத்தில் தவிர்க்க முடியாததொன்றாகும்."

(i) மோதல் ஏற்படுவதற்கான காரணங்கள் இரண்டை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) மோதல்களை சமாதானமாத் தீர்ப்பதால் ஏற்படும் பயன்கள் மூன்றை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) மோதல் தீர்க்கும் முறைகள் இரண்டைக் குறிப்பிட்டு, அதில் ஒன்றை பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் அனுகூலங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(05) "சட்டத்தை மதித்தலும் கட்டுப்படுதலும் ஒரு பிரஜையின் கடமையாகும்."

(i) சட்டத்தின் மூலாதாரங்கள் இரண்டைக் கூறுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் காணப்படும் நீதிமன்றங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையில் நீதிமன்ற தொகுதியை பாதுகாக்க அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டுள்ள கொள்கைகள் மூன்றை எழுதி, அதில் ஒன்றை விளக்குக. (05 புள்ளிகள்)

(06) "மானிடனாக பிறந்தமையால் எவ்வித வேறுபாடுகளுமின்றி மனிதனுக்கு பிறப்புரிமையாகவே கிடைக்கும் உரிமைகள் மனித உரிமைகள் எனப்படும்."

(i) குடியியல், அரசியல் உரிமைகள் ஒவ்வொன்றை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) சர்வதேச மனித உரிமைகள் சட்ட ஆவணங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

(iii) உரிமைகளுடன் கூடிய பிரஜைகளது கடமைகளின் வகைகள் இரண்டையும் எழுதி, பிரஜையாக அதில் ஒன்றின் கடமையைச் செய்யும் முறையை விளக்குக. (05 புள்ளிகள்)

(07) "சூழல் என்பதுஉயிருள்ள உயிரற்ற நிலைகளின் தொகுப்பாகும்."

(i) சூழல் தொகுதியில் உள்ளடங்கியுள்ள பிரதான கூறுகள் இரண்டைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) சூழல் தொடர்புடைய பிரஜைகளின் கடமைகள் பொறுப்புகள் மூன்றைத் தருக. (03 புள்ளிகள்)

(iii) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்றை எழுதி, அதில் ஒரு பிரச்சினையை விளக்குக. (05 புள்ளிகள்)

kalvi.lk

Scanned by CamScanner

# GRADE 6-11

STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page